உ

கடவுள் துணை.

பூலோகவசியமென்னும்

புஷ்பப்பாட்டு.

இவை

சென்னைப்புரசை

நாராயணசாமிப்பிள்ளை

அவர்களது

நற்றமிழ்விலாச அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டன.

விலை] 1906. [பை 3.

16, சரவணப்பெருமாள் முதலிவீதி,
புரசை, சென்னை.



உ

கடவுள் துணை.

பூலோகவசியமென்னும்

புஷ்பப்பாட்டு.

விநாயகர்-துதி.

வெண்பா.

பூலோகவசியமெனும் புஷ்பரஞ்சிதப்பாட்டை
சாலவேசெந்தமிழால் சாற்றவே-கோலமயில்
கந்தனுக்குமூத்த கரிமுகன்பொன்னடியை
சிந்தையினில்நெஞ்சே நினை.

சிந்து.

ஒய்யார மானபுட்பம்
ஒண்டொடியே செண்டுபுட்பம்
தையலர்கள் வாங்கும்புட்பம்
தருமகுணம் பாராய்புட்பம் (ஒய்)

குண்டுமல்லி கொடகுமல்லி
கோதையரே வூசிமல்லி
கண்டவுடன் ஆசைப்பூட்டும்
கன்னியரே ஜாதிமல்லி (ஒய்)

நந்தியா வட்டைபுட்பம்
நருமலர் கொன்றைபுட்பம்
விந்தையுள்ள பாரிசாதம்
வஞ்சியரே வாங்கும்புட்பம் (ஒய்)

மன்மத மானபுட்பம்
மடுக்கலறி ரோஜாபுட்பம்
விந்தையுள்ள பாரிசாதம்
வஞ்சியரே வாங்குப்புட்பம் (ஒய்)

வெந்தாழை செந்தாழை
வாசனைக ளுள்ளபுட்பம்
பெண்கோதை மார்களெல்லாம்
பூரித்து வாங்கும்புட்பம் (ஒய்)

காதவழி வாடைவீசும்
கண்மணியே மருக்கொழுந்து
மேதினி மார்கள்மெச்சும்
மேலான அடுக்கலறி (ஒய்)

மஞ்சா சாமந்தியுடன்
  மணமுள்ள வெண்சாமந்தி
கொஞ்சுகொங்கு மந்தாரை
  கோதையரே வாங்கும்புட்பம் (ஓய்)
அவ்வலரி செவ்வலரி
  ஆசைப்பூட்டும் நன்மருவு
செவ்விதழ் மாதருக்கு
  சிறந்தநல்ல புட்பமிது (ஓய்)
மனம்போலும் மனம்தருகும்
  மனோரஞ்சித மானபுட்பம்
இனமாகவே முடிக்க
  இருக்குமனம் மாரும்புட்பம் (ஓய்)
மயில்கொண்டை சாக்கொண்டை
  மகிட்சியுள்ள பன்னீர்புட்பம்
வையகத்தோர் தான்புகழும்
  வாடாத மல்லிபுட்பம் (ஓய்)
சம்பங்கி புட்பமோடு
  சதுராகும் ரேக்குசெண்டு
நம்பியிதை வாங்குங்கண்டு
  நாணயமாய்க் கோத்தசெண்டு (ஓய்)

புஷ்பப்பாட்டு.

கண்டவற்கு ஆசைபூணும்
கடிமலராம் மொகடம்புட்பம்
கொண்டைக்கேற்ற கோர்வைபுட்பம்
கொடுக்கமணம் பாரும்புட்பம் (ஒய்)

மந்தாரை ஜாதிபுட்பம்
மனதுக்கேற்ற நல்லபுட்பம்
விந்தையுள்ள வானபுட்பம்
மூலனைக்கொரு நிறமாம்புட்பம் (ஒய்)

சந்திரகாந்தி சூரியகாந்தி
சபைகள் நிறைந்தபுட்பம்
அந்தமுள்ள நிறங்கொடுக்கும்
அனேகவித மானபுட்பம் (ஒய்)

அந்தியிலே விற்கும்புட்பம்
ஆசைகொண்டு வாங்கும்புட்பம்
சொந்தமான சோதிபுட்பம்
தொடுத்தால் மணக்கும்புட்பம் (ஒய்)

வில்வமலர் துன்பமலர்
விமலருக்கு யேற்றமலர்
நெல்லியிதை வாங்குமலர்
உருதிபூசை கொள்ளுமலர் (ஒய்)

தாமரைப் புட்பமொடு
  தையலரே அல்லிமலர்
கோமளமே வாங்குமலர்
  குரிவேர் மணத்தைப்பாரும் (ஓய்)
பம்பாயி தேசமதில்
  பாங்காய் பூத்தபுட்பம்
இன்பமுரு மனந்தருகும்
  யேந்திழைமார் சூடும்புட்பம் (ஓய்)
பத்தினிமார் முடிக்கும்புட்பம்
  பலதேச ஜாதிபுட்பம்
சொத்து சரமானபுட்பம்
  கோர்க்காத விடுதிபுட்பம் (ஓய்)
அரசர் மகிழும்புட்பம்
  ஆரமாகக் கட்டும்புட்பம்
வரிசைக் குகந்தபுட்பம்
  வதுவைக் கலங்காரபுட்பம் (ஓய்)
தேவர்க் குகந்தபுட்பம்
  தேசமெங்கும் நிறைந்தபுட்பம்
ஆவலாகக் கன்னியற்கு
  ஆசைகொடுக்கும் புட்பம் (ஓய்)

புஷ்பப்பாட்டு.

பூசைக் குகந்தபுட்பம்
பூவையர்கள் சூடும்புட்பம்
நேசமது செய்யும்புட்பம்
நீயேவாங்கும் கண்ணேபுட்பம் (ஒய்)

புகழோங்கும் புட்பப்பாட்டு
புவியோங்குந் தானறிய
மகிழ்செஞ்சி யேகாம்பரம்
மரையங்கவி படித்தோர்வாழ்க (ஒய்)

பெருமையுடன் புட்பப்பாட்டை
பிரியமாய் நாராயணசாமிப்பிள்ளை
நற்றமிழ்விலாசம் பிரெஸ்ஸில்
நலமாக அச்சிலிட்டார் (ஒய்)

வாழ்கவே அவர்மரபும்
வாசித்தோர் தானும்வாழ்க
நேசமுடன் கேட்டவரும்
நீடூழிகாலம் வாழ்க. (ஒய்)

பூலோகவசியமென்னும்
புஷ்பப்பாட்டு முற்றிற்று.